முருகப்பெருமான் துணை

**மகான் பதஞ்சலியார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.10.2021, திங்கட்கிழமை

1. வாழும் ஞானியே வள்ளலே
வையகம் காத்திடும் தவசியே
காலன் இடரை போக்கியே
கலிவாழ் மக்களை மீட்டிட அருளும்
2. அருளும் கந்தமகா சொரூபமே
அரங்க மகானே உன்பெருமை கூறி
வரமென துல்லிய ஆசிதனை
வழங்குவேன் பதஞ்சலியார் யானும்
3. யானும் பிலவ தரிவை திங்கள்
உயர்வான மூவாறுதிகதி சோமவாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 18ம் நாள், 04.10.2021 திங்கட்கிழமை)
ஞானலோகம் அமைய உரைப்பேன்
ஞானிகளை வெளிக் கொண்டு வரும்படி
4. வரும்படியான உயர் பூசையை
வல்லமைபட முழுமதி தோறும்
தருமம்படவே செய்து வருகின்ற
தவசியே உன் முயற்சி வெற்றி பெறும்
5. வெற்றிபெற பதஞ்சலி யானும்
வினவிட சூட்சுமமாகப் பரவி
ஆற்றல்பட உன் பூசை கலந்து
அரங்கா என தீட்சை பெறும் காலம்
6. காலமதில் மக்களுக்கு தீட்சை
கரங்கள் வழி உன் சக்தியோடு
கோலமதாய் தந்து வருகின்றேன்
குறைவிலா ஞானம்பயிலும் வண்ணம்
7. வண்ணமாக நீ தரும் உபதேசங்களை
வரவேற்று வலுகூட்டி இணைந்து
எண்ணம் வழி உன்னை எண்ணி
எளிய தியானம் செய்தாலும் வருபவர்க்கு
8. வருபவர்க்கு சித்தி அருளும்படி
வரம் தருகின்றேன் யானும்
குரு உன் அவதாரம் பூர்த்திபட
குறையிலா சூட்சும பலமாக இறங்கி

9. இறங்கியே இந்த கலியுகத்தில்
எண்ணிலா கோடி மாந்தர்களை
அரங்கன் வழி ஞானியாக்கும்
அற்புத உலக சேவை தன்னில்

10. தன்னிலே அகத்தியர் முதலான
தலைமை முனிகள் வழியில்
இன்னாளில் பதஞ்சலியும் இணைந்து
இணையிலா யோகசித்தி வழங்கி

11. வழங்கியே அரங்கன் ஆசிபட
வருபவர்க்கு அருள் ஆசி கூட்டி
களங்கமற சித்திகள் தந்து
கலியுகத்தை ஞான யுகமாக்குவேன்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—

ஆற்றலாம் பதஞ்சலி அருளினைப் போற்றிட
ஏற்றமே வாழ்வில் இன்பமும் உண்டாம்!

ஆற்றலாம் பதஞ்சலி அருளினைப் போற்றிட
கூற்றுவனை வெல்லக் குறிப்பும் தோன்றுமே!

அருளாளன் பதஞ்சலி அருளினைப் போற்றிட
இருளெல்லாம் விலகி இன்பமும் உண்டாம்!

பற்றற்ற முனிவன் பதஞ்சலியைப் போற்றிட
நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!

நாட்டமாம் பதஞ்சலியை நாளும் போற்றிட
வாட்டமும் இல்லை மனமும் செம்மையே!

இதமாம் பதஞ்சலி இணையடி போற்றிட
வதம் செய்யும் கூற்றுவனை வதைக்கலாமே!

அன்னையாம் பதஞ்சலி அருளினைப் போற்றிட
என்னையும் காத்து எனக்கருள் செய்தாரே!

வஞ்சிக்கும் மாயைதனை வஞ்சித்த பதஞ்சலியை
நெஞ்சத்தில் நிறுத்திட நிலை உயர்வே!

பதஞ்சலி முனிவனின் பதத்தை போற்றியே
இதமுடன் வாழ்ந்திட இன்பம் உண்டாம்!

உண்டாம் இன்பமும் இணையடி போற்றிட
துன்பமும் இல்லை துணையாம் இணையடி!

சித்தியாம் பதஞ்சலி திருவடி போற்றிட
முக்தியும் உண்டு சுழிமுனையும் திறக்குமே!